ஸ்ரீ:

ஸ்ரீமதே இராமானுசாய நம:

ஸ்ரீமத் வரவர முநயே நம:



# ஆண்டாள் அருளிச்செய்த

# நாச்சியார் திருமொழி

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

ஜீயர் திருவடிகளே சரணம்

## ஆண்டாள் அருளிச்செய்த
# நாச்சியார் திருமொழி

### நாச்சியார் திருமொழித் தனியன்கள்

**திருக்கண்ணமங்கையாண்டான் அருளிச்செய்தது**
அல்லிநாள் தாமரை மேல் ஆரணங்கினின் துணைவி *
மல்லி நாடாண்ட மடமயில் * மெல்லியலாள்
ஆயர்குல வேந்தனாகத்தாள் * தென்புதுவை
வேயர் பயந்த விளக்கு

### நாச்சியார் திருமொழி

## 1. தையொரு திங்களும்
(கண்ணனோடு கூடும்படி காமனைத் தொழுதல்)

1. ## தையொரு திங்களும் தரை விளக்கித் *
தண் மண்டலமிட்டு மாசி முன்னாள் *
ஐய நுண்மணற் கொண்டு தெருவணிந்து *
அழகினுக்கலங்கரித்து அனங்க தேவா **
உய்யவுமாங்கொலோ என்று சொல்லி *
உன்னையும் உம்பியையும் தொழுதேன் *
வெய்யதோர் தழலுமிழ் சக்கரக் கை *
வேங்கடவற்கென்னை விதிக்கிற்றியே 504

2. வெள்ளை நுண்மணற் கொண்டு தெருவணிந்து *
வெள்வரைப்பதன் முன்னம் துறை படிந்து *
முள்ளுமில்லாச் சுள்ளி எரிமடுத்து *

முயன்று உன்னை நோற்கின்றேன் காமதேவா **
கள்ளவிழ் பூங்கணை தொதுத்துக் கொண்டு *
கடல் வண்ணன் என்பதோர் பேரெழுதி *
புள்ளினை வாய் பிளந்தான் என்பதோர் *
இலக்கினில் புக என்னை எய்கிற்றியே 505

3. மத்தநன்னறுமலர் முருக்கமலர் கொண்டு *
முப்போதும் உன்னடி வணங்கி *
தத்துவமிலியென்று நெஞ்செரித்து *
வாசகத்தழித்து உன்னை வைதிடாமே **
கொத்தலர் பூங்கணை தொடுத்துக்கொண்டு *
கோவிந்தன் என்பதோர் பேரேழுதி *
வித்தகன் வேங்கடவாணன் என்னும் *
விளக்கினில் புக என்னை விதிக்கிற்றியே 506

4. சுவரில் புராண நின் பேரேழுதிச் *
சுறவநற்கொடிக்களும் துரங்கங்களும் *
கவரிப்பிணாக்களும் கருப்பு வில்லும் *
காட்டித் தந்தேன் கண்டாய் காமதேவா **
அவரைப் பிராயம் தொடங்கி *
என்றும் ஆதரித்தெழுந்த என் தடமுலைகள் *
துவரைப் பிரானுக்கே சங்கற்பித்துத் *
தொழுது வைத்தேன் ஒல்லை விதிக்கிற்றியே 507

5. வானிடை வாழும் அவ்வானவர்க்கு *
மறையவர் வேள்வியில் வகுத்த அவி *
கானிடைத் திரிவதோர் நரி புகுந்து *
கடப்பதும் மோப்பதும் செய்வதொப்ப **
ஊனிடை ஆழி சங்கு உத்தமர்க்கென்று *
உன்னித்தெழுந்த என் தடமுலைகள் *
மானிடவர்க்கென்று பேச்சுப்படில் *
வாழகில்லேன் கண்டாய் மன்மதனே 508

6. உருவுடையார் இளையார்கள் நல்லார் *
ஒத்து வல்லார்களைக் கொண்டு * வைகல்
தெருவிடை எதிர் கொண்டு பங்குனி நாள் *
திருந்தவே நோற்கின்றேன் காமதேவா **
கருவுடை முகில் வண்ணன் காயா வண்ணன் *
கருவிளை போல் வண்ணன் கமல வண்ணத் *
திருவுடை முகத்தினில் திருக்கண்களால் *
திருந்தவே நோக்கெனக்கருள் கண்டாய் 509

7. காயுடை நெல்லொடு கரும்பமைத்துக் *
கட்டி அரிசி அவல் அமைத்து *
வாயுடை மறையவர் மந்திரத்தால் *
மன்மதனே உன்னை வணங்குகின்றேன் **
தேசமுன்னளந்தவன் திரிவிக்கிரமன் *
திருக்கைகளால் என்னைத் தீண்டும் வண்ணம் *
சாயுடை வயிறும் என் தடமுலையும் *
தரணியில் தலைப்புகழ் தரக்கிற்றியே 510

8. மாசுடை உடம்பொடு தலையுலறி *
வாய்ப்புறம் வெளுத்து ஒருபோதுமுண்டு *
தேசுடைத் திறலுடைக் காமதேவா *
நோற்கின்ற நோன்பினைக் குறிக்கொள் கண்டாய் **
பேசுவதொன்றுண்டு இங்கு எம்பெருமான் *
பெண்மையைத் தலையுடைத்தாக்கும் வண்ணம் *
கேசவ நம்பியைக் கால் பிடிப்பாள் என்னும் *
இப்பேறு எனக்கருள் கண்டாய் 511

9. தொழுது முப்போதும் உன்னடி வணங்கித் *
தூமலர் தூய்த் தொழுதேத்துகின்றேன் *
பழுதின்றிப் பாற்கதல் வண்ணனுக்கே *
பணி செய்து வாழுப் பெறாவிடில் நான் **
அழுதழுதலமந்தம்மா வழுங்க *

ஆற்றவும் அது உனக்கு உறைக்கும் கண்டாய் *
உழுவதோர் எருத்தினை நுகங்கொடு பாயந்து *
ஊட்டமின்றித் துரந்தால் ஒக்குமே 512

10. **##** கருப்புவில் மலர்க் கணைக் காமவேளைக் *
கழலிணை பணிந்து அங்கோர் கரியலற *
மருப்பினை ஒசித்துப் புள்வாய் பிளந்த *
மணிவண்ணற்கு என்னை வகுத்திடென்று **
பொருப்பன்ன மாடம் பொலிந்து தோன்றும் *
புதுவையர் கோன் விட்டுசித்தன் கோதை *
விருப்புடை இன்தமிழ் மாலை வல்லார் *
விண்ணவர் கோனடி நண்ணுவரே 513

## 2. நாமமாயிரம்

(இடைப் பெண்கள் சிற்றில் சிதைக்க வேண்டாவென்று கண்ணனை வேண்டுதல்)

11. ## நாமமாயிரம் ஏத்த நின்ற * நாராயணா நரனே * உன்னை
மாமி தன் மகனாகப் பெற்றால் * எமக்கு வாதை தவிருமே **
காமன் போதரு காலமென்று * பங்குனி நாள் கடை பாரித்தோம் *
தீமை செய்யும் சிரீதரா * எங்கள் சிற்றில் வந்து சிதையேலே 514

12. இன்று முற்றும் முதுகு நோவ * இருந்திழைத்த இச்சிற்றிலை *
நன்றும் கண்ணுற நோக்கி * நாங்கொளும் ஆர்வந்தன்னைத் தணிகிடாய் **
அன்று பாலகனாகி * ஆலிலை மேல் துயின்ற எம்மாதியாய் *
என்றும் உன்தனக்கு எங்கள் மேல் * இரக்கம் எழாதது எம் பாவமே 515

13. குண்டுநீருறை கோளரீ * மத யானை கோள் விடுத்தாய் * உன்னைக்
கண்டு மாலுறுவோங்களைக் * கடைக் கண்களாலிட்டு வாதியேல் **
வண்டல் நுண்மணல் தெள்ளி * யாம் வளைக் கைகளால் சிரமப்பட்டோம் *
தெண் திரைக் கடற்பள்ளியாய் * எங்கள் சிற்றில் வந்து சிதையேலே 516

14. பெய்யுமா முகில் போல் வண்ணா * உன்தண் பேச்சும் செய்கையும் * எங்களை
மையலேற்றி மயக்க * உன் முகம் மாய மந்திரம் தான் கொலோ **
நொய்யார் பிள்ளைகள் என்பதற்கு * உன்னை நோவ நாங்கள் உரைக்கிலோம் *
செய்ய தாமரைக் கண்ணினாய் * எங்கள் சிற்றில் வந்து சிதையேலே 517

15. வெள்ளை நுண்மணற் கொண்டு * சிற்றில் விசித்திரப்பட * வீதி வாய்த்
தெள்ளி நாங்கள் இழைத்த கோலம் * அழித்தியாகிலும் உன்தன் மேல் **
உள்ளமோடி உருகலல்லால் * உரோடம் ஒன்றுமிலோம் கண்டாய் *
கள்ள மாதவா கேசவா * உன் முகத்தன கண்கள் அல்லவே 518

16. முற்றிலாத பிள்ளைகளோம் * முலை போந்திலாதோமை * நாள்தொறும்
சிற்றில் மேலிட்டுக் கொண்டு * நீ சிறிதுண்டு திண்ணென நாமது
கற்றிலோம் ** கடலை அடைத்து அரக்கர் குலங்களை * முற்றவும்
செற்று * இலங்கையைப் பூசலாக்கிய கேசவா * எம்மை வாதியேல் 519

17. பேதம் நன்கறிவார்களோடு * இவை பேசினால் பெரிது இன்சுவை *
யாதும் ஒன்றறியாத பிள்ளைகளோமை * நீ நலிந்து என் பயன் **
ஓதுமா கடல் வண்ணா * உன் மணவாட்டிமாரொடு சூழுறும் *
சேதுபந்தம் திருத்தினாய் * எங்கள் சிற்றில் வந்து சிதையேலே 520

18. வட்டவாய்ச் சிறு தூதையோடு * சிறு சுளகும் மணலும் கொண்டு *
இட்டமா விளையாடுவோங்களைச் * சிற்றில் ஈடழித்தென் பயன் **
தொட்டுதைத்து நலியேல் கண்டாய் * சுடர்ச் சக்கரம் கையில் ஏந்தினாய் *
கட்டியும் கைத்தால் இன்னாமை * அறிதியே கடல் வண்ணனே 521

19. முற்றத்தூடு புகுந்து * நின் முகம் காட்டிப் புன்முறுவல் செய்து *
சிற்றிலோடு எங்கள் சிந்தையும் * சிதைக்கக் கடவையோ கோவிந்தா **
முற்ற மண்ணிடம் தாவி * விண்ணுற நீண்டளந்து கொண்டாய் * எம்மைப்
பற்றி மெய்ப்பிணக்கிட்டக்கால் * இந்தப் பக்கம் நின்றவர் என் சொல்லார் 522

20. ## சீதைவாய் அமுதம் உண்டாய் * எங்கள் சிற்றில் நீ சிதையேல் என்று *
வீதிவாய் விளையாடும் * ஆயர் சிறுமியர் மழலைச் சொல்லை **
வேதவாய்த் தொழிலார்கள் வாழ் * வில்லிபுத்தூர்மன் விட்டுசித்தன் தன் *
கோதைவாய்த் தமிழ் வல்லவர் * குறைவின்றி வைகுந்தம் சேர்வரே 523

## 3. கோழி அழைப்பதன்

(கண்ணன் கவர்ந்த கூறைகளைக் கன்னியர் இரத்தல்)

21. ## கோழி அழைப்பதன் முன்னம் * குடைந்து நீராடுவான் போந்தோம் *
ஆழியஞ்செல்வன் எழுந்தான் * அரவணை மேல் பள்ளி கொண்டாய் **
ஏழமை ஆற்றவும் பட்டோம் * இனி என்றும் பொய்கைக்கு வாரோம் *
தோழியும் நானும் தொழுதோம் * துகிலைப் பணித்தருளாயே 524

22. இது என் புகுந்தது இங்கந்தோ * இப்பொய்கைக்கு எவ்வாறு வந்தாய் *
மதுவின் துழாய் முடி மாலே * மாயனே எங்கள் அமுதே **
விதியின்மையால் அது மாட்டோம் * வித்தகப் பிள்ளாய் விரையேல் *
குதிகொண்டு அரவில் நடித்தாய் * குருந்திடைக் கூறை பணியாய் 525

23. எல்லே ஈதென்ன இளமை * எம்மனைமார் காணிலொட்டார் *
பொல்லாங்கு ஈதென்று கருதாய் * பூங்குருந்தேறி இருத்தி **
வில்லால் இலங்கை அழித்தாய் * நீ வேண்டியதெல்லாம் தருவோம் *
பல்லாரும் காணாமே போவோம் * பட்டைப் பணித்தருளாயே 526

24. பரக்க விழித்து எங்கும் நோக்கிப் * பலர் குடைந்தாடும் சுனையில் *
அரக்க நில்லா கண்ண நீர்கள் * அலமருகின்றவா பாராய் **
இரக்கமேலொன்றும் இலாதாய் * இலங்கை அழித்த பிரானே *
குரக்கரசு ஆவதறிந்தோம் * குருந்திடைக் கூறை பணியாய் 527

25. காலைக் கதுவிடுகின்ற * கயலொடு வாளை விரவி *
வேலைப் பிடித்தென்னைமார்களொட்டில் * என்ன விளையாட்டோ **
கோலச் சிற்றாடை பலவும் கொண்டு * நீ ஏறி இராதே *
கோலம் கரிய பிரானே * குருந்திடைக் கூறை பணியாய் 528

26. தடத்தவிழ் தாமரைப் பொய்கைத் * தாள்கள் எம் காலைக் கதுவ *
விடத்தேளெறிந்தாலே போல * வேதனை அற்றவும் பட்டோம் **
குடத்தை எடுத்தேற விட்டுக் * கூத்தாட வல்ல எங்கோவே *
படிற்றை எல்லாம் தவிர்ந்து * எங்கள் பட்டைப் பணித்தருளாயே 529

27. நீரிலே நின்று அயர்க்கின்றோம் * நீதி அல்லாதன செய்தாய் *
ஊரகம் சாலவும் சேய்த்தால் * ஊழி எல்லாம் உணர்வானே **
ஆர்வம் உனக்கே உடையோம் அம்மனைமார் காணிலொட்டார் *
போர விடாய் எங்கள் பட்டைப் * பூங்குறுந்தேறி இராதே 530

28. மாமிமார் மக்களே அல்லோம் * மற்றும் இங்கு எல்லாரும் போந்தார் *
தூமலர்க் கங்கள் வளரத் * தொல்லையிராத் துயில்வானே **
சேமமேலன்றிது சாலச் * சிக்கென நாமிது சொன்னோம் *
கோமள ஆயர் கொழுந்தே * குருந்திடைக் குறை பணியாய் 531

29. கஞ்சன் வலை வத்து அன்று * காரிருள் எல்லில் பிழைத்து *
நெஞ்சு துக்கம் செய்யப் போந்தாய் * நின்ற இக்கன்னியரோமை **
அஞ்ச உரப்பாள் அசோதை * ஆணாட விட்டிட்டிருக்கும் *
வஞ்சகப் பேய்ச்சி பால் உண்ட * மசிமையிலீ கூறை தாராய் 532

30. **##** கன்னியரோடு எங்கள் நம்பி * கரிய பிரான் விளையாட்டை *
பொன்னியல் மாடங்கள் சூழ்ந்த * புதுவையர் கோன் பட்டன் கோதை **
இன்னிசையால் சொன்ன மாலை * ஈரைந்தும் வல்லவர் தாம் போய் *
மன்னிய மாதவனோடு * வைகுந்தம் புக்கிருப்பாரே 533

## 4. தெள்ளியார் பலர்

(கூடலிழைத்தல்)

31. ## தெள்ளியார் * பலர் கைதொழும் தேவனார் *
வள்ளல் * மாலிருஞ்சோலை மணாளனார் **
பள்ளி கொள்ளும் இடத்து * அடி கொட்டிட *
கொள்ளுமாகில் * நீ கூடிடு கூடலே 534

32. ## காட்டில் வேங்கடம் * கண்ணபுர நகர் *
வாட்டமின்றி * மகிழ்ந்துறை வாமனன் **
ஓட்டரா வந்து * என் கைப்பற்றி * தன்னோடும்
கூட்டுமாகில் * நீ கூடிடு கூடலே 535

33. பூமகன் புகழ் வானவர் * போற்றுதற்
காமகன் * அணிவாணுதல் * தேவகி
மாமகன் ** மிகு சீர் * வசுதேவர் தம் *
கோமகன் வரில் * கூடிடு கூடலே 536

34. ஆய்ச்சிமார்களும் * ஆயரும் அஞ்சிட *
பூத்த நீள் * கடம்பேறிப் புகப் பாய்ந்து **
வாய்த்த காளியன் மேல் * நடமாடிய *
கூத்தனார் வரில் * கூடிடு கூடலே 537

35. மாட மாளிகை சூழ் * மதுரைப் பதி
நாடி * நந்தெருவின் நடுவே வந்திட்டு **
ஓதைமா * மதயானை உதைத்தவன் *
கூடுமாகில் * நீ கூடிடு கூடலே 538

36. அற்றவன் * மருதம் முறிய நடை
கற்றவன் * கஞ்சனை * வஞ்சனையினால்
செற்றவன் ** திகழும் மதுரைப் பதி *
கொற்றவன் வரில் * கூடிடு கூடலே 539

37. அன்று இன்னாதன செய் * சிசுபாலனும் *
நின்ற நீள் * மருதும் எருதும் புள்ளும் **
வென்றி வேல் * விறல் கஞ்சனும் வீழ * முன்
கொன்றவன் வரில் * கூடிடு கூடலே 540

38. ஆவல் அன்புடையார் தம் * மனத்தன்றி
மேவலன் * விரை சூழ் * துவராபதிக்
காவலன் ** கன்று மேய்த்து விலையாடும் *
கோவலன் வரில் * கூடிடு கூடலே 541

39. கொண்ட கோலக் * குறள் உருவாய்ச் சென்று *
பண்டு மாவலி தன் * பெரு வேள்வியில் **
அண்டமும் நிலனும் * அடி ஒன்றினால் *
கொண்டவன் வரில் * கூடிடு கூடலே 542

40. பழகு நான்மறையின் பொருளாய் * மதம்
ஒழுகு வாரணம் * உய்ய அளித்த ** எம்
அழகனார் * அணியாய்ச்சியர் சிந்தையுள் *
குழகனார் வரில் * கூடிடு கூடலே 543

41. **##** ஊடல் கூடல் * உணர்தல் புணர்தலை *
நீடு நின்ற * நிறை புகழ் ஆய்ச்சியர் **
கூடலைக் * குழற் கோதை முன் கூறிய *
பாடல் பத்தும் வல்லார்க்கு * இல்லை பாவமே 544

## 5. மன்னு பெரும்புகழ்

(எம்பெருமானைக் கூவி அழைக்கும்படி குயிலை வேண்டுதல்)

42. ## மன்னு பெரும் புகழ் மாதவன் * மாமணி வண்ணன் மணிமுடி மைந்தன்
தன்னை * உகந்தது காரணமாக * என் சங்கிழக்கும் வழக்குண்டே **
புன்னை குருக்கத்தி ஞாழல் செருந்திப் * பொதும்பினில் வாழும் குயிலே *
பன்னி எப்போதும் இருந்து விரைந்து * என் பவள வாயன் வரக் கூவாய் 545

43. வெள்ளை விளிசங்கு இடங்கையில் கொண்ட * விமலன் எனக்கு உருக்காட்டான் *
உள்ளம் புகுந்து என்னை நைவித்து * நாளும் உயிர்பெய்து கூத்தாட்டுக் காணும் **
கள்ளவிழ் செண்பகப் பூமலர் கோதிக் * களித்திசை பாடும் குயிலே *
மெள்ள இருந்து மிழற்றி மிழற்றாது * என் வேங்கடவன் வரக் கூவாய் 546

44. மாதலி தேர் முன்பு கோல் கொள்ள * மாயன் இராவணன் மேல் * சர மாரி
தாய்தலை அற்றற்று வீழத் * தொடுத்த தலைவன் வரவெங்கும் காணேன் **
போதலர் காவில் புதுமணம் நாறப் * பொறிவண்டின் காமரம் கேட்டு * உன்
காதலியோடு உடன் வாழ் குயிலே * என் கரு மாணிக்கம் வரக் கூவாய் 547

45. என்புருகி இனவேல் நெடுங் கண்கள் * இமை பொருந்தா பல நாளும் *
துன்பக் கடல் புக்கு வைகுந்தன் என்பதோர் * தோணி பெறாது உழல்கின்றேன் **
அன்புடையாரைப் பிரிவுறு நோய் * அது நீயும் அறிதி குயிலே *
பொன்புரை மேனிக் கருளக் கொடியுடைப் * புண்ணியனை வரக் கூவாய் 548

46. ## மென்னடை அன்னம் பரந்து விளையாடும் * வில்லிபுத்தூர் உறைவான் தன் *
பொன்னடி காண்பதோர் ஆசையினால் * என் பொருகயற் கண்ணிணை துஞ்சா **
இன்னடிசிலொடு பாலமுதூட்டி * எடுத்த என் கோலக் கிளியை *
உன்னொடு தோழமை கொள்ளுவன் குயிலே * உலகளந்தான் வரக் கூவாய் 549

47. எத்திசையும் அமரர் பணிந்தேத்தும் * இருடீகேசன் வலி செய்ய *
முத்தன்ன வெண்முறுவல் செய்ய வாயும் * முலையும் அழகழிந்தேன் நான் **
கொத்தலர் காவில் மணித்தடம் * கண்படை கொள்ளும் இளங்குயிலே * என்
தத்துவனை வரக் கூகிற்றியாகில் * தலை அல்லால் கைம்மாறிலேனே 550

48. பொங்கிய பாற்கடல் பள்ளிகொள்வானைப் * புணர்வதோர் ஆசையினால் * என்
கொங்கை கிளர்ந்து குமைத்துக் குதுகலித்து * ஆவியை ஆகுலம் செய்யும்
அங்குயிலே ** உனக்கென்ன மறைந்துறைவு * ஆழியும் சங்கும் ஒண்தண்டும் *
தங்கிய கையவனை வரக் கூவில் * நீ சாலத் தருமம் பெறுதி 551

49. சார்ங்கம் வளைய வலிக்கும் * தடக்கைச் சதுரன் பொருத்தமுடையன் *
நாங்கள் எம்மில்லிருந்தொட்டியகச்சங்கம் * நானும் அவனும் அறிதும் **
தேங்கனி மாம்பொழில் செந்தளிர் கோதும் * சிறுகுயிலே * திருமாலை
ஆங்கு விரைந்தொல்லை கூகிற்றியாகில் * அவனை நான் செய்வன காணே 552

50. பைங்கிளி வண்ணன் சிரீதரன் என்பதோர் * பாசத்து அகப்பட்டிருந்தேன் *
பொங்கொளி வண்டிரைக்கும் பொழில் வாழ் குயிலே * குறிக் கொண்டு இது நீ கேள் **
சங்கொடு சக்கரத்தான் வரக் கூவுதல் * பொன்வளை கொண்டு தருதல் *
இங்குள்ள காவினில் வாழக் கருதில் * இரண்டத்தொன்றேல் திண்ணம் வேண்டும் 553

51. அன்றுலகம் அளந்தானை உகந்து * அடிமைக்கண் அவன் வலி செய்ய *
தென்றலும் திங்களும் ஊடறுத்து * என்னை நலியும் முறைமை அறியேன் **
என்றும் இக்காவில் இருந்திருந்து * என்னைத் ததைத்தாதே நீயும் குயிலே *
இன்று நாராயணனை வரக் கூவாயேல் * இங்குத்தை நின்றும் துரப்பன் 554

52. ## விண்ணுற நீண்டு அடி தாவிய மைந்தனை * வேற்கண் மடந்தை விரும்பி *
கண்ணுற என் கடல் வண்ணனைக் * கூவு கருங்குயிலே என்ற மாற்றம் **
பண்ணுறு நான்மறையோர் புதுவை மன்னன் * பட்டர் பிரான் கோதை சொன்ன *
நண்ணுறு வாசக மாலை வல்லார் * நமோ நாராயணாய என்பாரே 555

## 6. வாரணமாயிரம்

(ஆயனை மணம் செய்து கொள்வதாகத் தான் கண்ட கனாவைத் தலைவி தோழிக்குக் கூறுதல்)

53. ## வாரணம் ஆயிரம் * சூழ வலம் செய்து *
நாரண நம்பி * நடக்கின்றான் என்றெதிர் **
பூரண பொற்குதம் * வைத்துப் புரம் எங்கும் *
தோரணம் நாட்டக் * கனாக் கண்டேன் தோழீ! நான் 556

54. நாளை வதுவை * மணம் என்று நாள் இட்டு *
பாளை கமுகு * பரிசுடைப் பந்தற் கீழ் **
கோள் அரி மாதவன் * கோவிந்தன் என்பான் ஓர் *
காளை புகுதக் * கனாக் கண்டேன் தோழீ! நான் 557

55. இந்திரன் உள்ளிட்ட * தேவர் குழாம் எல்லாம் *
வந்திருந்து என்னை * மகள் பேசி மந்திரித்து **
மந்திரக் கோடி உடுத்தி * மண மாலை *
அந்திரி சூட்டக் * கனாக் கண்டேன் தோழீ! நான் 558

56. நால் திசைத் தீர்த்தம் கொணர்ந்து * நனி நல்கி *
பார்ப்பனச் சிட்டர்கள் * பல்லார் எடுத்தேத்தி **
பூப்புனை கண்ணிப் * புனிதனோடு என்தன்னை *
காப்பு நாண் கட்டக் * கனாக் கண்டேன் தோழீ! நான் 559

57. கதிரொளி தீபம் * கலசம் உடன் ஏந்தி *
சதிர் இளமங்கையர் தாம் * வந்தெதிர் கொள்ள **
மதுரையார் மன்னன் * அடி நிலை தொட்டு எங்கும் *
அதிரப் புகுதக் * கனாக் கண்டேன் தோழீ! நான் 560

58. மத்தளம் கொட்ட * வரி சங்கம் நின்றூத *
முத்துடைத் தாமம் * நிறை தாழ்ந்த பந்தற் கீழ் **
மைத்துனன் நம்பி * மதுசூதனன் வந்து என்னைக் *
கைத்தலம் பற்றக் * கனாக் கண்டேன் தோழீ! நான் 561

59. வாய் நல்லார் * நல்ல மறை ஓதி மந்திரத்தால் *
பாசிலை நாணல் படுத்துப் * பரிதி வைத்து **
காய்ச்சினமா களிறு அன்னான் * என் கைப் பற்றி *
தீ வலம் செய்யக் * கனாக் கண்டேன் தோழீ! நான் 562

60. இம்மைக்கும் * ஏழ் ஏழ் பிறவிக்கும் பற்றாவான் *
நம்மை உடையவன் * நாராயணன் நம்பி **
செம்மை உடைய * திருக்கையால் தாள் பற்றி *
அம்மி மிதிக்கக் * கனாக் கண்டேன் தோழீ! நான் 563

61. வரிசிலை வாள் முகத்து * என்னைமார் தாம் வந்திட்டு *
எரி முகம் பாரித்து * என்னை முன்னே நிறுத்தி **
அரி முகன் அச்சுதன் * கைம்மேல் என் கை வைத்து *
பொரி முகம் தட்ட * கனாக் கண்டேன் தோழீ! நான் 564

62. குங்குமம் அப்பிக் * குளிர் சாந்தமட்டித்து *
மங்கல வீதி * வலம் செய்து மண நீர் **
அங்கு அவனோடும் * உடன் சென்று அங்கானை மேல் *
மஞ்சனம் ஆட்டக் * கனாக் கண்டேன் தோழீ! நான் 565

63. **##** ஆயனுக்காகத் * தான் கண்ட கனாவினை *
வேயர் புகழ் * வில்லிபுத்தூர்க் கோன் கோதை சொல் **
தூய தமிழ் மாலை * ஈரைந்தும் வல்லவர் *
வாயு நன்மக்களைப் பெற்று * மகிழ்வாரே 566

## 7. கற்பூரம் நாறுமோ

(பாஞ்சசன்னியத்தைப் பத்மநாபனோடும் சுற்றமாக்குதல்)

64. ## கருப்பூரம் நாறுமோ * கமலப்பூ நாறுமோ *
திருப்பவளச் செவ்வாய் தான் * தித்தித்திருக்குமோ **
மருப்பொசித்த மாதவன் தன் * வாய்ச் சுவையும் நாற்றமும் *
விருப்புற்றுக் கேட்கின்றேன் * சொல்லாழி வெண்சங்கே 567

65. கடலில் பிறந்து கருதாது * பஞ்சசனன்
உடலில் உலர்ந்து போய் * ஊழியான் கைத்தலத்
திடரில் ** குடியேறித் * தீய அசுரர் *
நடலைப்பட முழங்கும் * தோற்றத்தாய் நற்சங்கே 568

66. தடவரையின் மீதே * சரற்கால சந்திரன் *
இடையுவாவில் வந்து * எழுந்தாலே போல் ** நீயும்
வடமதுரையார் மன்னன் * வாசுதேவன் கையில் *
குடியேறி வீற்றிருந்தாய் * கோலப் பெரும் சங்கே 569

67. சந்திர மண்டலம் போல் * தாமோதரன் கையில் *
அந்தரம் ஒன்றின்றி * ஏறி அவன் செவியில் **
மந்திரம் கொள்வாயே போலும் * வலம்புரியே *
இந்திரனும் உன்னோடு * செல்வத்துக்கேலானே 570

68. உன்னோடு உடனே * ஒருகடலில் வாழ்வாரை *
இன்னார் இனையார் என்று * எண்ணுவார் இல்லை காண் **
மன்னாகி நின்ற * மதுசூதன் வாயமுதம் *
பன்னாளும் உண்கின்றாய் * பாஞ்சசன்னியமே 571

69. போய்த்தீர்த்தம் ஆடாதே * நின்ற புணர் மருதம் *
சாய்த்தீர்த்தான் கைத்தலத்தே * ஏறிக் குடி கொண்டு **
சேய்த்தீர்த்தமாய் நின்ற * செங்கண்மால் தன்னுடைய *
வாய்த்தீர்த்தம் பாய்ந்தாட வல்லாய் * வலம்புரியே 572

70. செங்கமல நாண்மலர் மேல் * தேனுகரும் அன்னம் போல் *
செங்கட் கருமேனி * வாசுதேவனுடைய **
அங்கைத் தலம் ஏறி * அன்னவசம் செய்யும் *
சங்கரையா உன் செல்வம் * சால அழகியதே 573

71. உண்பது சொல்லில் * உலகளந்தான் வாயமுதம் *
கண்படை கொள்ளில் * கடல்வண்ணன் கைத்தலத்தே **
பெண்படையார் உன் மேல் * பெரும் பூசல் சாற்றுகின்றார் *
பண்பல செய்கின்றாய் * பாஞ்சசன்னியமே 574

72. பதினாறாமாயிரவர் * தேவிமார் பார்த்திருப்ப *
மது வாயில் கொண்டாற் போல் * மாதவன் தன் வாயமுதம் **
பொதுவாக உண்பதனைப் * புக்கு நீ உண்டக்கால் *
சிதையாரோ உன்னோடு * செல்வப் பெரும் சங்கே 575

73. **##** பாஞ்சசன்னியத்தைப் * பற்பனாபனோடும் *
வாய்ந்த பெரும் சுற்றம் * ஆக்கிய வண்புதுவை **
ஏய்ந்த புகழ்ப் பட்டர் பிரான் * கோதை தமிழ் ஈரைந்தும் *
ஆய்ந்தேத்த வல்லார் * அவரும் அணுக்கரே 576

## 8. விண்ணீல மேலாப்பு

(மேக விடு தூது)

74. ## விண்ணீல மேலாப்பு * விரித்தாற்போல் மேகங்காள் *
தெண்ணீர் பாய் வேங்கடத்து * என் திருமாலும் போந்தானே **
கண்ணீர்கள் முலைக் குவட்டில் * துளி சோரச் சோர்வேனை *
பெண்ணீர்மை ஈடழிக்கும் * இது தமக்கோர் பெருமையே 577

75. மாமுத்த நிதி சொரியும் * மாமுகில்காள் * வேங்கடத்துச்
சாமத்தின் நிறம் கொண்ட * தாடாளன் வார்த்தை என்னே **
காமத் தீயுள் புகுந்து * கதுவப்பட்டு இடைக் கங்குல் *
ஏமத்தோர் தென்றலுக்கு * இங்கிலக்காய் நான் இருப்பேனே 578

76. ஒளிவண்ணம் வளை சிந்தை * உறக்கத்தோடு இவை எல்லாம் *
எளிமையால் இட்டு என்னை * ஈடழியப் போயினவால் **
குளிரருவி வேங்கடத்து * என் கோவிந்தன் குணம் பாடி *
அளியத்த மேகங்காள் * ஆவி காத்திருப்பேனே 579

77. மின்னாகத்தெழுகின்ற * மேகங்காள் * வேங்கடத்துத்
தன்னாகத் திருமங்கை * தங்கிய சீர் மார்வர்க்கு **
என்னாகத்திளம் கொங்கை * விரும்பித் தாம் நாள் தோறும் *
பொன்னாகம் புல்குதற்கு * என் புரிவிடைமை செப்புமினே 580

78. வான் கொண்டு கிளர்ந்தெழுந்த * மாமுகில்காள் * வேங்கடத்துத்
தேன் கொண்ட மலர் சிதறத் * திரண்டேறிப் பொழிவீர்காள் **
ஊன் கொண்ட வள்ளுகிரால் * இரணியனை உடல் இடந்தான் *
தான் கொண்ட சரிவளைகள் * தருமாகில் சாற்றுமினே 581

79. சலங்கொண்டு கிளர்ந்தெழுந்த * தண் முகில்காள் * மாவலியை
நிலங்கொண்டான் வேங்கடத்தே * நிரந்தேறிப் பொழிவீர்காள் **
உலங்குண்ட விளங்கனி போல் * உள் மெலியப் புகுந்து * என்னை
நலங்கொண்ட நாரணற்கு * என் நடலை நோய் செப்புமினே 582

80. ## சங்கமா கடல் கடைந்தான் * தண் முகில்காள் * வேங்கடத்துச்
செங்கண்மால் சேவடிக் கீழ் * அடி வீழ்ச்சி விண்ணப்பம் **
கொங்கை மேல் குங்குமத்தின் * குழம்பழியப் புகுந்து * ஒரு நாள்
தங்கு மேல் * என்னாவி தங்குமென்று உரையீரே 583

81. கார் காலத்தெழுகின்ற * கார் முகில்காள் * வேங்கடத்துப்
போர் காலத்தெழுந்தருளிப் * பொருதவனார் பேர் சொல்லி **
நீர் காலத்து எருக்கி * நம் பழவிலை போல் வீழ்வேனை *
வார் காலத்து ஒரு நாள் * தம் வாசகம் தந்தருளாரே 584

82. ## மத யானை போல் எழுந்த * மாமுகில்காள் * வேங்கடத்தைப்
பதியாக வாழ்வீர்காள் * பாம்பணையான் வார்த்தை என்னே **
கதி என்றும் தானாவான் * கருதாது * ஓர் பெண் கொடியை
வதை செய்தான் என்னும் சொல் * வையகத்தார் மதியாரே 585

83. ## நாகத்தின் அணையானை * நன்னுதலாள் நயந்து உரை செய் *
மேகத்தை வேங்கடக் கோன் * விடு தூதில் விண்ணப்பம் **
போகத்தில் வழுவாத * புதுவையர் கோன் கோதை தமிழ் *
ஆகத்து வைத்துரைப்பார் * அவரடியார் ஆகுவரே 586

## 9. சிந்தூரச் செம்பொடி

(திருமாலிருஞ்சோலை அழகரை வழிபடுதல்)

84. ## சிந்தூரச் செம்பொடிப் போல் * திருமாலிருஞ்சோலை எங்கும் *
இந்திர கோபங்களே * எழுந்தும் பரந்திட்டனவால் **
மந்தரம் நாட்டி அன்று * மதுரக் கொழுஞ்சாறு கொண்ட *
சுந்தரத் தோள் உடையான் * சுழலையில் நின்று உய்துங்கொலோ? 587

85. போர்க் களிறு பொரும் * மாலிருஞ்சோலையம் பூம்புறவில் *
தார்க்கொடி முல்லைகளும் * தவள நகை காட்டுகின்ற **
கார்க்கொள் படாக்கள் நின்று * கழறிச் சிரிக்கத் தரியேன் *
ஆர்க்கிடுகோ? தோழீ! * அவன் தார் செய்த பூசலையே 588

86. கருவிளை ஒண் மலர்காள்! * காயா மலர்காள்! * திருமால்
உருவொளி காத்துகின்றீர் * எனக்கு உய்வழக்கொன்று உரையீர் **
திருவிளையாடு திண் தோள் * திருமாலிருஞ்சோலை நம்பி *
வரி வளையில் புகுந்து * வந்தி பற்றும் வழக்குளதே 589

87. பைம்பொழில் வாழ் குயில்காள்! * மயில்காள்! ஒண் கருவிளைகாள்! *
வம்பக் களங்கனிகாள்! * வண்ணப் பூவை நறுமலர்காள்! **
ஐம்பெரும் பாதகர்காள்! * அணி மாலிருஞ்சோலை நின்ற *
எம்பெருமானுடைய நிறம் * உங்களுக்கு என் செய்வதே? 590

88. துங்க மலர்ப் பொழில் சூழ் * திருமாலிருஞ்சோலை நின்ற *
செங்கட் கருமுகிலின் * திரு உருப் போல் ** மலர் மேல்
தொங்கிய வண்டினங்காள்! * தொகு பூஞ் சுனைகாள்! * சுனையில்
தங்கு செந்தாமரைகாள்! * எனக்கு ஓர் சரண் சாற்றுமினே 591

89. ## நாறு நறும் பொழில் * மாலிருஞ்சோலை நம்பிக்கு * நான்
நூறு தடாவில் வெண்ணெய் * வாய் நேர்ந்து பராவி வைத்தேன் **
நூறு தடா நிறைந்த * அக்கார அடிசில் சொன்னேன் *
ஏறு திரு உடையான் * இன்று வந்து இவை கொள்ளுங்கொலோ? 592

90. இன்று வந்து இத்தனையும் * அமுது செய்திடப் பெறில் * நான்
ஒன்று நூறாயிரமாக் கொடுத்துப் * பின்னும் ஆளும் செய்வன் **
தென்றல் மணம் கமழும் * திருமாலிருஞ்சோலை தன்னுள்
நின்ற பிரான் * அடியேன் மனத்தே வந்து நேர் படிலே 593

91. காலை எழுந்திருந்து * கரிய குருவிக் கணங்கள் *
மாலின் வரவு சொல்லி * மருள் பாடுதல் மெய்ம்மை கொலோ? **
சோலை மலைப் பெருமான் * துவராபதி எம்பெருமான் *
ஆலினிலைப் பெருமான் * அவன் வார்த்தை உரைக்கின்றதே 594

92. கோங்கலரும் பொழில் * மாலிருஞ்சோலையில் கொன்றைகள் மேல் *
தூங்கு பொன் மாலைகளோடு * உடனாய் நின்று தூங்குகின்றேன் **
பூங்கொள் திருமுகத்து * மடுத்தூதிய சங்கொலியும் *
சார்ங்கவில் நாண் ஒலியும் * தலைப்பெய்வது எஞ்ஞான்று கொலோ 595

93. **##** சந்தொடு காரகிலும் சுமந்து * தடங்கள் பொருது *
வந்திழியும் சிலம்பாறுடை * மாலிருஞ்சோலை நின்ற
சுந்தரனை ** சுரும்பார் குழல் * கோதை தொகுத்துரைத்த *
செந்தமிழ் பத்தும் வல்லார் * திருமால் அடி சேர்வர்களே 596

## 10. கார்க்கோடல் பூக்காள்

(தலைவி பிரிந்த நிலையில் பிரிவாற்றாது வருந்திக் கூறுதல்)

94. ## கார்க்கோடல் பூக்காள் * கார்க்கடல் வண்ணன் என் மேல் *
போர்க்கோலம் செய்து * போர விடுத்தவன் எங்குற்றான் **
ஆர்க்கோ இனி நாம் * பூசலிடுவது * அணி துழாய்த்
தார்க்கோடும் நெஞ்சம் தன்னைப் * படைக்க வல்லேன் அந்தோ 597

95. மேல் தோன்றிப் பூக்காள் * மேலுலகங்களின் மீது போய் *
மேல் தோன்றும் சோதி * வேத முதல்வர் வலங்கையில் **
மேல் தோன்றும் ஆழியின் * வெஞ்சுடர் போலச் சுடாது * எம்மை
மாற்றோலைப் பட்டவர் கூட்டத்து * வைத்துக் கொள்கிற்றிரே 598

96. கோவை மணாட்டி * நீ உன் கொழுங்கனி கொண்டு * எம்மை
ஆவி தொலைவியேல் * வாயழகர் தம்மை அஞ்சுதும் **
பாவியேன் தோன்றிப் * பாம்பணையார்க்கும் தம் பாம்பு போல் *
நாவும் இரண்டுளவாய்த்து * நாணிலியேனுக்கே 599

97. முல்லைப் பிராட்டி * நீ உன் முறுவல்கள் கொண்டு * எம்மை
அல்லல் விளைவியேல் * ஆழி நங்காய் உன் அடைக்கலம் **
கொல்லை அரக்கியை மூக்கரிந்திட்ட * குமரனார்
சொல்லும் பொய்யானல் * நானும் பிறந்தமை பொய்யன்றே 600

98. பாடும் குயில்காள் * ஈதென்ன பாடல் * நல் வேங்கட
நாடர் நமக்கு ஒரு வாழ்வு தந்தால் * வந்து பாடுமின் **
ஆடும் கருளக் கொடியுடையார் * வந்து அருள் செய்து *
கூடுவராயிடில் * கூவி நும் பாட்டுகள் கேட்டுமே 601

99. கணமா மயில்காள் * கண்ண பிரான் திருக்கோலம் போன்று *
அணிமா நடம் பயின்றாடுகின்றீர்க்கு * அடி வீழ்கின்றேன் **
பணம் ஆடரவணைப் * பற்பல காலமும் பள்ளிகொள் *
மணவாளர் நம்மை வைத்த * பரிசிது காண்மினே 602

100. நடமாடித் தோகை விரிக்கின்ற * மாமயில்காள் * உம்மை
நடமாட்டம் காணப் * பாவியேன் நானோர் முதலியேன் **
குடமாடு கூத்தன் * கோவிந்தன் கோமிறை செய்து * எம்மை
உடைமாடு கொண்டான் * உங்களுக்கினி ஒன்று போதுமே 603

101. ## மழையே மழையே மண்புறம் பூசி * உள்ளாய் நின்ற
மெழுகூற்றினாற் போல் * ஊற்றுநல் வேங்கடத்துள் நின்ற **
அழகப் பிரானார் தம்மை * என் நெஞ்சத்தகப்படத்
தழுவ நின்று * என்னை ததர்த்திக் கொண்டு * ஊற்றவும் வல்லையே 604

102. கடலே கடலே உன்னைக் கடைந்து * கலக்குறுத்து *
உடலுள் புகுந்து நின்று * ஊறல் அறுத்தவற்கு ** என்னையும்
உடலுள் புகுந்து நின்று * ஊறல் அறுக்கின்ற மாயற்கு * என்
நடலைகள் எல்லாம் * நாகணைக்கே சென்றுரைத்தியே 605

103. ## நல்ல என் தோழி * நாகணைமிசை நம்பரர் *
செல்வர் பெரியர் * சிறுமானிடவர் நாம் செய்வதென் **
வில்லி புதுவை * விட்டுசித்தர் தங்கள் தேவரை *
வல்ல பரிசு வருவிப்பரேல் * அது காண்டுமே 606

## 11.தாமுகக்கும்

(தலைவி திருவரங்கன் செய்கைக்கு மனம் பெறாது தாய்மார்
முதலியோரை நோக்கி வருந்திக் கூறுதல்)

104. ## தாம் உகக்கும் தம் கையில் * சங்கே போலாவோ *
யாமுகக்கும் எங்கையில் * சங்கமும் ஏந்திழையீர் **
தீ முகத்து நாகணை மேல் * சேரும் திருவரங்கர் *
ஆ முகத்தை நோக்காரால் * அம்மனே அம்மனே 607

105. எழிலுடைய அம்மனைமீர் * என்னரங்கத்தின்னமுதர் *
குழலழகர் வாயழகர் * கண்ணழகர் ** கொப்பூழில்
எழுகமலப் பூவழகர் * எம்மானார் * என்னுடைய
கழல் வலையைத் * தாமும் கழல் வலையே ஆக்கினரே 608

106. ## பொங்கோதம் சூழ்ந்த * புவனியும் விண்ணுலகும் *
அங்கோதம் சோராமே * ஆள்கின்ற எம்பெருமான் **
செங்கோல் உடைய * திருவரங்கச் செல்வனார் *
எங்கோல் வளையால் * இடர் தீர்வராகாதே 609

107. மச்சணி மாட * மதிளரங்கர் வாமனனார் *
பச்சைப் பசுந்தேவர் * தாம் பண்டு நீரேற்ற **
பிச்சைக் குறையாகி * உன்னுடைய பெய்வளை மேல் *
இச்சை உடையரேல் * இத்தெருவே போதாரே 610

108. பொல்லாக் குறளுருவாய்ப் * பொற்கையில் நீரேற்று *
எல்லா உலகும் * அளந்து கொண்ட எம்பெருமான் **
நல்லார்கள் வாழும் * நளிர் அரங்க நாகணையான் *
இல்லாதோம் கைப்பொருளும் * எய்துவான் ஒத்துளனே 611

109. கைப்பொருள்கள் முன்னமே * கைக்கொண்டார் * காவிரி நீர்
செய்ப்புரள ஓடும் * திருவரங்கச் செல்வனார் **
எப்பொருட்கும் நின்றார்க்கும் * எய்தாது * நான்மறையின்
சொற்பொருளாய் நின்றார் * என் மெய்ப்பொருளும் கொண்டாரே 612

110. உண்ணாது உறங்காது * ஒலிகடலை ஊடறுத்து *
பெண்ணாக்கை ஆப்புண்டு * தாமுற்ற பேதெல்லாம் **
திண்ணார் மதிள் சூழ் * திருவரங்கச் செல்வனார் *
எண்ணாதே தம்முடைய * நன்மைகளே எண்ணுவரே 613

111. ## பாசி தூர்த்துக் கிடந்த * பார்மகட்கு * பண்டொரு நாள்
மாசுடம்பில் நீர்வாரா * மானமிலாப் பன்றியாம் **
தேசுடைய தேவர் * திருவரங்கச் செல்வனார் *
பேசி இருப்பனகள் * பேர்க்கவும் பேராவே 614

112. கண்ணாலம் கோடித்துக் * கன்னி தன்னைக் கைப்பிடிப்பான் *
திண்ணார்ந்திருந்த * சிசுபாலன் தேசழிந்து **
அண்ணாந்திருக்கவே * ஆங்கவளைக் கைப்பிடித்த *
பெண்ணாளன் பேணுமூர் * பேரும் அரங்கமே 615

113. ## செம்மை உடைய * திருவரங்கர் தாம் பணித்த *
மெய்ம்மைப் பெரு வார்த்தை * விட்டுசித்தர் கேட்டிருப்பர் **
தம்மை உகப்பாரைத் * தாம் உகப்பர் என்னும் சொல் *
தம்மிடையே பொய்யானால் * சாதிப்பார் ஆரினியே 616

## 12. மற்றிருந்தீர்

(தலைவி கண்ணன் உள்ள இடத்தில் தன்னைக் கொண்டு
விடும்படி உற்றாரை வேண்டுதல்)

114. ## மற்றிருந்தீர்கட்கு அறியலாகா * மாதவன் என்பதோர் அன்பு தன்னை *
உற்றிருந்தேனுக்கு உரைப்பதெல்லாம் * ஊமையரோடு செவிடர் வார்த்தை **
பெற்றிருந்தாளை ஒழியவே போய்ப் * பேர்த்தொரு தாயில் வளர்ந்த நம்பி *
மற்பொருந்தாமற்களம் அடைந்த * மதுரைப் புறத்து என்னை உய்த்திடுமின் 617

115. நாணி இனியோர் கருமம் இல்லை * நாலயலாரும் அறிந்தொழிந்தார் *
பாணியாது என்னை மருந்து செய்து * பண்டு பண்டாக்க உறுதிராகில் **
மாணி உருவாய் உலகளந்த * மாயனைக் காணில் தலைமறியும் *
ஆணையால் நீர் என்னைக் காக்க வேண்டில் *
ஆய்ப்பாடிக்கே என்னை உய்த்திடுமின் 618

116. தந்தையும் தாயும் உற்றாரும் நிற்கத் * தனி வழி போயினாள் என்னும் சொல்லு *
வந்த பின்னைப் பழி காப்பரிது * மாயவன் வந்து உருக்காட்டுகின்றான் **
கொந்தளமாக்கிப் பரக்கழித்துக் * குறும்பு செய்வானோர் மகனைப் பெற்ற *
நந்தகோபாலன் கடைத்தலைக்கே * நள்ளிருட்கண் என்னை உய்த்திடுமின் 619

117. அங்கைத் தலைத்திடை ஆழிகொண்டான் * அவன் முகத்தன்றி விழியேன் என்று *
செங்கச்சுக் கொண்டு கண்ணாடையார்த்துச் * சிறுமானிடவரைக் காணில் நாணும் **
கொங்கைத் தலமிவை நோக்கிக் காணீர் * கோவிந்தனுக்கல்லால் வாயில் போகா *
இங்குத்தை வாழ்வை ஒழியவே போய் *
யமுனைக் கரைக்கு என்னை உய்த்திடுமின் 620

118. ஆர்க்கும் என்நோயிது அறியலாகாது * அம்மனைமீர் துழதிப்படாதே *
கார்க்கடல் வண்ணன் என்பான் ஒருவன் * கைகண்ட யோகம் தடவத் தீரும் **
நீர்க்கரை நின்ற கடம்பை ஏறிக் * காளியன் உச்சியில் நட்டம் பாய்ந்து *
போர்க்களமாக நிருத்தம் செய்த * பொய்கைக் கரைக்கு என்னை உய்த்திடுமின் 621

119. கார்த்தண் முகிலும் கருவிளையும் * காயா மலரும் கமலப் பூவும் *
ஈர்த்திடுகின்றன என்னை வந்திட்டு * இருடீகேசன் பக்கல் போகே என்று **
வேர்த்துப் பசித்து வயிறசைந்து * வேண்டடிசில் உண்ணும் போது * ஈதென்று
பார்த்திருந்து நெடுநோக்குக் கொள்ளும் * பத்தவிலோசனத்து உய்த்திடுமின் 622

120. வண்ணம் திரிவும் மனங்குழைவும் * மானம் இலாமையும் வாய் வெளுப்பும் *
உண்ணல் உறாமையும் உள்மெலிவும் * ஓதநீர் வண்ணன் என்பான் ஒருவன் **
தண்ணந்துழாய் என்னும் மாலை கொண்டு * சூட்டத் தணியும் பிலம்பன் தன்னைப் *
பண்ணழியப் பலதேவன் வென்ற * பாண்டி வடத்து என்னை உய்த்திடுமின் 623

121. கற்றினம் மேய்க்கிலும் மேய்க்கப் பெற்றான் * காடுவாழ் சாதியும் ஆகப் பெற்றான்*
பற்றி உரலிடை ஆப்பும் உண்டான் * பாவிகாள் உங்களுக்கு ஏச்சுக் கொலோ **
கற்றன பேசி வசை உணாதே * காலிகள் உய்ய மழை தடுத்து *
கொற்றக் குடையாக ஏந்தி நின்ற * கோவர்த்தனத்து என்னை உய்த்திடுமின் 624

122. கூட்டில் இருந்து கிளி எப்போதும் * கோவிந்தோ கோவிந்தோ என்றழைக்கும் *
ஊட்டுக் கொடாது செறுப்பனாகில் * உலகளந்தான் என்று உயரக் கூவும் **
நாட்டில் தலைப்பதி எய்தி * உங்கள் நன்மை இழந்து தலையிடாதே *
சூட்டுயர் மாடங்கள் சூழ்ந்து தோன்றும் * துவராபதிக்கு என்னை உய்த்திடுமின் 625

123. **##** மன்னு மதுரை தொடக்கமாக * வண்துவராபதி தன்னளவும் *
தன்னை தமருய்த்துப் பெய்ய வேண்டித் * தாழ் குழலாள் துணிந்த துணிவை **
பொன்னியல் மாடம் பொலிந்து தோன்றும் *
புதுவையர் கோன் விட்டு சித்தன் கோதை *
இன்னிசையால் சொன்ன செஞ்சொல் மாலை *
ஏத்த வல்லார்க்கிடம் வைகுந்தமே 626

## 13. கண்ணனென்னும்

(தலைவி கண்ணன் அணிந்த ஆடை முதலியவற்றால்
தன் வாட்டத்தைத் தணிக்க வேண்டுதல்)

124. ## கண்ணன் என்னும் கருந்தெய்வம் * காட்சிப் பழகிக் கிடப்பேனை *
புண்ணில் புளிப்பெய்தாற் போல் * புறம் நின்று அழகு பேசாதே **
பெண்ணின் வருத்தம் அறியாத * பெருமான் அரையில் பீதக *
வண்ண ஆடை கொண்டு * என்னை வாட்டம் தணிய வீசீரே 627

125. பாலாலிலையில் துயில் கொண்ட * பரமன் வலைப்பட்டிருந்தேனை *
வேலால் துன்னம் பெய்தாற் போல் * வேண்டிற்றெல்லாம் பேசாதே **
கோலால் நிரை மேய்த்து ஆயனாய்க் * குடந்தைக் கிடந்த குடமாடி *
நீலார் தண்ணந்துழாய் கொண்டு * என் நெறிமென் குழல் மேல் சூட்டீரே 628

126. கஞ்சைக் காய்ந்த கருவில்லி * கடைக்கணென்னும் சிறைக் கோலால் *
நெஞ்சூடுவ ஏவுண்டு * நிலையும் தளர்ந்து நைவேனை **
அஞ்சேலென்னான் அவன் ஒருவன் * அவன் மார்வணிந்த வனமாலை *
வஞ்சியாதே தருமாகில் * மார்வில் கொணர்ந்து புரட்டீரே 629

127. ஆரே உலகத்து ஆற்றுவார் * ஆயர்பாடி கவர்ந்துண்ணும் *
காரேறுழக்க உழக்குண்டு * தளர்ந்தும் முறிந்தும் கிடப்பேனை **
ஆராவமுதம் அனையான் தன் * அமுத வாயில் ஊறிய *
நீர் தான் கொணர்ந்து புலராமே * பருக்கி இளைப்பை நீக்கீரே 630

128. அழிலும் தொழிலும் உருக்காட்டான் * அஞ்லேல் என்னான் அவன் ஒருவன் *
தழுவி முழுவிப் புகுந்தென்னைச் * சுற்றிச் சுழன்று போகானால் **
தழையின் பொழில்வாய் நிரைப் பின்னே * நெதுமால் ஊதி வருகின்ற *
குழலின் தொளைவாய் நீர் கொண்டு * குளிர முகத்துத் தடவீரே 631

129. நடை ஒன்றில்லா உலகத்து * நந்தகோபன் மகன் என்னும் *
கொடிய கடிய திருமாலால் * குளப்புக் கூறு கொளப்பட்டு **
புடையும் பெயராகில்லேன் நான் * போட்கன் மிதித்த அடிப்பாட்டில் *
பொடித் தான் கொணர்ந்து பூசீர்கள் * போகா உயிர் என் உடம்பையே 632

130. வெற்றி கருளக் கொடியான் தன் * மீமீதாடா உலகத்து *
வெற்ற வெறிதே பெற்றதாய் * வேம்பேயாகா வளர்த்தாளே **
குற்றமற்ற முலை தன்னைக் * குமரன் கோலப் பணைத் தோளோடு *
அற்ற குற்றம் அவை தீர * அணைய அமுக்கிக் கட்டீரே 633

131. உள்ள உருகி நைவேனை * உளளோ இலளோ என்னாத *
கொள்ளை கொள்ளிக் குறும்பனைக் * கோவர்த்தனனைக் கண்டக்கால் **
கொள்ளும் பயனொன்றில்லாத * கொங்கை தன்னைக் கிழங்கொடும் *
அள்ளிப் பறித்திட்டு அவன் மார்வில் எறிந்து * என் அழலை தீர்வேனே 634

132. கொம்மை முலைகள் இடர் தீரக் * கோவிந்தற்கோர் குற்றேவல் *
இம்மைப் பிறவி செய்யாதே * இனிப் போய்ச் செய்யும் தவம் தான் என் **
செம்மை உடைய திருமார்வில் * சேர்த்தானேலும் ஒரு ஞான்று *
மெய்ம்மை சொல்லி முகம் நோக்கி * விடை தான் தருமேல் மிக நன்றே 635

133. ## அல்லல் விளைத்த பெருமானை * ஆயர்பாடிக்கு அணிவிளக்கை *
வில்லி புதுவை நகர் நம்பி * விட்டுசித்தன் வியன் கோதை **
வில்லைத் தொலைத்த புருவத்தாள் * வேட்கையுற்று மிக விரும்பும் *
சொல்லைத் துதிக்க வல்லார்கள் * துன்பக் கடலுள் துவளாரே 636

## 14. பட்டி மேய்ந்து

(விருந்தாவனத்தே பரமனைக் கண்டமை கூறுதல்)

134. ## பட்டி மேய்ந்தோர் காரேறு * பலதேவற்கு ஓர் கீழ்க் கன்றாய் *
இட்டீறிட்டு விளையாடி * இங்கே போதக் கண்டீரே? **
இட்டமான பசுக்களை * இனிது மறித்து நீருட்டி *
விட்டுக் கொண்டு விளையாட * விருந்தாவனத்தே கண்டோமே 637

135. அனுங்க என்னைப் பிரிவு செய்து * ஆயர்பாடி கவர்ந்துண்ணும் *
குணுங்கு நாறிக் குட்டேற்றாஈக் * கோவர்த்தனனைக் கண்டீரே? **
கணங்களோடு மின்மேகம் * கலந்தாற் போல வனமாலை *
மினுங்க நின்று விளையாட * விருந்தாவனத்தே கண்டோமே 638

136. மாலாய்ப் பிறந்த நம்பியை * மாலே செய்யும் மணாளனை *
ஏலாப் பொய்கள் உரைப்பானை * இங்கேபோதக் கண்டீரே? **
மேலால் பரந்த வெயில் காப்பான் * வினதை சிறுவன் சிறகென்னும் *
மேலாப்பின் கீழ் வருவானை * விருந்தாவனத்தே கண்டோமே 639

137. கார்த்தண் கமலக்கண் என்னும் * நெடுங்கயிறு படுத்தி * என்னை
ஈர்த்துக் கொண்டு விளையாடும் * ஈசன் தன்னைக் கண்டீரே? **
போர்த்த முத்தின்குப்பாயப் * புகர்மால் யானைக் கன்றே போல் *
வேர்த்து நின்று விளையாட * விருந்தாவனத்தே கண்டோமே 640

138. ## மாதவன் என் மணியினை * வலையில் பிழைத்த பன்றி போல் *
ஏதும் ஒன்றும் கொளத்தாரா * ஈசன் தன்னைக் கண்டீரே? **
பீதக ஆடை உடை தாழப் * பெருங்கார் மேகக் கன்றே போல் *
வீதியார வருவானை * விருந்தாவனத்தே கண்டோமே 641

139. தருமம் அறியாக் குறும்பனைத் * தன் கைச் சார்ங்கம் அதுவே போல் *
புருவ வட்டம் அழகிய * பொருத்தமிலியைக் கண்டீரே? **
உருவு கரிதாய் முகம் செய்தாய் * உதயப் பருப்பதத்தின் மேல் *
விரியும் கதிரே போல்வானை * விருந்தாவனத்தே கண்டோமே 642

140. பொருத்தம் உடைய நம்பியைப் * புறம்போல் உள்ளும் கரியானை *
கருத்தைப் பிழைத்து நின்ற * அக்கருமா முகிலைக் கண்டீரே? **
அருத்தித்தாரா கணங்களால் * ஆரப் பெருகு வானம் போல் *
விருத்தம் பெரிதாய் வருவானை * விருந்தாவனத்தே கண்டோமே 643

141. வெளிய சங்கொன்றுடையானைப் * பீதக ஆடை உடையானை *
அளிநன்குடைய திருமாலை * ஆழியானைக் கண்டீரே? **
களிவண்டு எங்கும் கலந்தாற் போல் * கமழ்பூங் குழல்கள் தடந்தோள் மேல் *
மிளர நின்று விளையாட * விருந்தாவனத்தே கண்டோமே 644

142. ## நாட்டைப் படை என்று அயன் முதலாத் தந்த * நளிர் மாமலர் உந்தி *
வீட்டைப் பண்ணி விளையாடும் * விமலன் தன்னைக் கண்டீரே? **
காட்டை நாடித் தேனுகனும் * களிறும் புள்ளும் உடன் மடிய *
வேட்டையாடி வருவானை * விருந்தாவனத்தே கண்டோமே 645

143. ## பருந்தாட் களிற்றுக்கு அருள் செய்த * பரமன் தன்னை * பாரின் மேல்
விருந்தாவனத்தே கண்டமை * விட்டுசித்தன் கோதை சொல் **
மருந்தாம் என்று தம் மனத்தே * வைத்துக் கொண்டு வாழ்வார்கள் *
பெருந்தாள் உடைய பிரான் அடிக் கீழ்ப் * பிரியாதென்றும் இருப்பாரே 646

**ஆண்டாள் திருவடிகளே சரணம்**
**ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்**
**ஜீயர் திருவடிகளே சரணம்**